**தலைப்பு 283 – வன பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வன பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வன பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளதென்றும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று** | | |
| 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் விடய இலக்கம் 283011 என்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 04 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2020 யூலை 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் பத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | | |
| | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தின் படி நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தின் படி நிலையான சொத்துப் பதிவேடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் பேணிச் செல்லப்பட வேண்டும். | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 267/2018 இன் மூலம் வழங்கப்பட்டுள்ள பொது அறிவுரைகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் செல்லுதல் கட்டாயமில்லாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடென்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தினந்தோறும் பரீட்சிக்க முடியுமான வகையில் பொறுப்பு பதிவேடொன்றில் அந்த பொறுப்புக்கள் குறிப்பிடப்பட வேண்டும். | திணைக்களத்திற்கு போதுமான அளவு கட்டு நிதி காணப்படுகின்றமையினால் பொறுப்புப் பதிவேட்டை பேணிச் செல்லும் தேவையொன்று காணப்படவில்லை. |

**1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்படுத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றித் தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து முறைமையை ஆக்கபூர்வமாக ஆக்குவதற்கு தேவையான மாற்றங்களை செய்யவேண்டியிருந்தமையும், அந்த மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்மைக்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | ஆரம்ப அறிக்கை மற்றும் பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்படாத 09 இழப்பீடுகள் மீளாய்வாண்டின் போது அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பூரண அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்ட போதும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 175,323 பெறுமதியான 07 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய காசோலைகள் தொடர்பாக தற்போது நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) நிதிப்பிரமாணம் 507 மற்றும் 756 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் மெய்மெய்யாய்வு சபை நியமிக்கப்பட்டு நிதிப் பிரமாணம் 128 இன் கீழ் உரிய காலப் பகுதியில் பொருட்கள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2020 மே 31 ஆம் திகதி வரையிலும் 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் | நிதிப் பிரமாணம் 128 இன் கீழ் உரிய காலப் பகுதியில் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | கொவிட் 19 காரணமாக சகல மாவட்ட அலுவலங்கள், நுவரெலியா வலையம் மற்றும் நுவரெலியா வன ஆராய்ச்சி நிறுவனம் என்ற இடங்களில் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(2) | பிணை வைப்பு மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியின் போது தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 3,067,449 ஆகும். தீர்க்கப்படாத மீதியில் ரூபா 2,817,188 தொகை 2020 மே 29 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்ததுடன், மேலும் தீர்க்கப்படாத மீதி ரூபா 250,260 ஆகும். | நிதிப் பிரமாணம் 373(1) இன் பிரகாரமும், 2019 நவம்பர் 11 ஆம் திகதிய 05/2019 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரமும் 2020 சனவரி 06 ஆம் திகதியில் உள்ளவாறு காசுப் புத்தகத்தின் மீதி தீர்க்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட படிகள், முற்பணங்களை தீர்ப்பதற்காக தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து காசோலை 2019 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெறாமையினால் ரூபா 3,067,449 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------------------

வருமான மதிப்பீட்டை தயாரித்தல், நிலுவையாக இருந்த வருமானத்தை சேகரித்தல், வருமானத்தை கைவிடல் மற்றும் பதிவழித்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் தனியார் மரங்கள் போக்குவரத்து வருமான குறியீட்டிற்குரிய ரூபா 125 மில்லியன் தொகையான அனுமதிப்பத்திர கட்டண வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 108.93 மில்லியன் தேறிய வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அதனால், வருமான எல்லையினை அடைந்து கொள்ளாமை ரூபா 16.07 மில்லியனாக இருந்ததுடன், அது 12.85 சதவீத வீழ்ச்சியாகும். | நிதிப் பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக சரியான வருமான மதிப்பீட்டை தயாரித்தல் மற்றும் அதற்குரிய பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை பின்பற்றி வருமானத்தின் நிர்வாகத்தை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். | வருமானங்களை நிர்ணயித்தல் நூற்றுக்கு நூறு சதவீதம் சரியாக எதிர்வு கூறுதல் வசதியீனமாக இருந்தது. |
| (ஆ) | அரசாங்கத்தின் காடுகளில் இருந்து கிடைக்கின்ற வருமான குறியீட்டிற்குரிய ரூபா 2,620 மில்லியன் தொகையான வருடாந்த வருமானமொன்றை சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 1,846.74 மில்லியன் தேறிய | -மேற்படி- | வருமான மதிப்பீடு ரூபா 1,800 மில்லியன் முதல் ரூபா 2,620 மில்லியன் வரை உயர்த்தி வைக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்டிருந்தது. அதனால் வருமானத்தின் எல்லையினை அடைய முடியாமை ரூபா 773.20 மில்லியனாக இருந்ததுடன், அது 29.51 சதவீத வீழ்ச்சியாகும். | | |
| (இ) | கடந்த 03 வருட காலத்தில் மேற்கூறப்பட்ட வருமானக் குறியீடு 02 இற்குரிய மொத்த நிலுவை வருமானம் முறையே ரூபா 1.21 மில்லியன் மற்றும் ரூபா 52.53 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் நிலுவை தொகை முறையே ரூபா 0.98 மில்லியன் மற்றும் ரூபா 52.87 மில்லியன் ஆகும். | நிதிப் பிரமாணம் 175(2) இன் பிரகாரம் வருமானத்தை சேகரிக்கின்ற உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் புறக்கணித்த உத்தியோகத்தர் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

---------------------------------------------

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல், நிதி ஏற்பாட்டை மாற்றுதல், குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல், நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல், சேமிப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------- | ----------------------------------- |
| (அ) | தேறிய நிதி ஏற்பாட்டிற்கும் உள்ளபடியான செலிவனங்களுக்கும் இடையே 10 சதவிதம் முதல் 51 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலவின விடய இலக்கம் 2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி செய்தலுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 60,000,000 தொகையான நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்த போதிலும், அந்த செலவின விடயத்தின் கீழ் சேமிப்பாக ஆண்டின் இறுதியில் ரூபா 68,363,232 தொகை காணப்பட்டது. நிதி ஏற்பாட்டை மாற்றுவதற்கு முன் மொத்த நிதி ஏற்பாடுகளில் 8.55 சதவீத சேமிப்பொன்று காணப்பட்டதுடன், நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்ட நிதி ஏற்பாடு நூற்றுக்கு நூறு சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி ஏற்பாட்டின் தேவை சரியான பிரகாரம் இனங்கணாப்பட்டு போதியளவான நிதி ஏற்பாடு மாத்திரம் மாற்றப்பட வேண்டும். | பாதீட்டு திணைக்களத்தின் BD/EE/160/09/Gen-2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நிதி ஏற்பாட்டை குறைத்தல் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்கான காரணமாகும். |
| (இ) | முகாமைத்துவத்தினால் சரியான பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக உணவு பானங்கள் மற்றும் சீருடைகள் செலவின விடயம் (1203) இன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூபா 15,000,000 தொகையான நிதி ஏற்பாட்டு தொகையில் 51 சதவீதம் அதாவது, ரூபா 7,693,558 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | செலவின விடய இலக்கம் 2507 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 3,000,000 தொகையொன்று மாற்றப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியில் அந்த தொகையினை விஞ்சி ரூபா 5,055,355 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2019 ஏப்ரல் 08 ஆம் திகதிய 3/2019 ஆம் இலக்க மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதி ஏற்பாடுகளில் 25 சதவீத நிதி ஏற்பாடு கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2002, 2102, 2104, 2106, 2003, 2103, 2105 மற்றும் 2401 ஆம் இலக்கங்களின் செலவின விடயங்களுக்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஏப்ரல் 08 ஆம் திகதிய 3/2019 ஆம் இலக்க மற்றும் 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதி ஏற்பாடுகளில் 25 சதவீத நிதி ஏற்பாடு கட்டாயமாக சேமிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 2.4 வைப்பு மீதிகள்

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பிணை வைப்பு மீதி ரூபா 402.16 மில்லியனாகும். அதனிடையே ரூபா 110.43 மில்லியன் தொகையான வைப்புக்கள் 05 வருடங்களை விஞ்சியிருந்ததுடன், ரூபா 199.95 மில்லியன் 02 வருடங்களை விஞ்சி காணப்பட்ட வைப்புக்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் 571(2) இன் பிரகாரம் காலாவதியான வைப்புக்கள் உரிய வைப்பாளர்களிடம் விசாரணை செய்து பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 02 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்த போதிலும், பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களுக்காக அந்த மீதிகள் வைப்புக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. |
| (ஆ) | மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பு மீதிகள் | -மேற்படி- | 02 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்த போதிலும், பூர்த்தி செய்யப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 53.5 மில்லியனாக இருந்ததுடன், அதன் இடையே ரூபா 3.97 மில்லியன் தொகையான வைப்புக்கள் 05 வருடங்களையும், ரூபா 6.31 மில்லியன் தொகையான வைப்புக்கள் 02 வருடங்களையும் விஞ்சியிருந்தது. | | செயற்திட்டங்களுக்காக அந்த மீதிகள் வைப்புக் கணக்கில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. |
| (இ) | மூன்றாம் தரப்பினருக்கு மீண்டும் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பு பெறுவனவுகள் ரூபா 391.35 மில்லியன் ஆக இருந்ததுடன், அது மொத்த வைப்புக்களில் 73.66 சதவீதம் ஆகும். | மூன்றாம் தரப்பினருக்கு அறிவித்து உரிய பணிகளை பூர்த்தி செய்யப்பட்டிருக்குமாயின் வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணைப் பணம் எதிர்காலத்தில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொலன்னறுவை மாவட்டத்தினால் ரூபா 3.84 மில்லியன் தொகையான மொத்த பாதுகாப்பு வைப்புக்களில் ரூபா 1.68 மில்லியன் தொகையான வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் இரண்டு வருடங்களை விஞ்சிய பாதுகாப்பு வைப்புக்கள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நட்டம் ரூபா 25,000 தொகைக்கு குறைவான 25 சம்பவங்களுக்குரிய ரூபா 222,414 தொகையும், நட்டம் ரூபா 25,000 இற்கு மேற்பட்ட 60 சம்பவங்களுக்குரிய ரூபா 21,460,949 தொகையும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், அதில் ரூபா 6,156,071 தொகையான 36 சம்பவங்களுக்காக நட்டம் ஏற்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடல் மற்றும் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (i) இல் நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டின் 10 இழப்புக்கள் மற்றும் குறிப்பு (i) இன் கீழ் உள்ளடக்கப்படாதிருந்த 09 இழப்பீடுகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் எந்தவொரு இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்புக்களாக இனங்காணக் கூடிய இழப்பீடுகளுக்காக இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்காமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐய வினாக்களுக்கு விரைவாக பதிலளிக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்டத்தில் வீரக்குழிச்சோலை வன ஒதுக்கப் பிரதேசத்தில் அனுமதியற்ற வகையில் மரங்களை தறித்தல் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் யூலை முதல் இது வரை 04 ஆரம்ப விசாரணை குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், எந்தவொரு குழுவும் 2020 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அது தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | ஆரம்ப விசாரணை மேற்கொண்டு அறிக்கையொன்று விரைவாக சமாப்பிக்ப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | வீரக்குழிச்சோலையின் ஆரம்ப விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையால் வன ஒதுக்கப் பிரதேசத்தில் அனுமதியின்றி தறிக்கப்பட்ட பாலை, பானக்கா, வீரை போன்ற 1,443 மரங்கள் தொடர்பாக 2020 யூன் வரையிலும் எந்தவொரு தகவலும் காணப்படாதிருந்ததுடன், | ஆரம்ப விசாரணைக் குழு அறிக்கை விரைவாக சமர்ப்பிக்கப்பட்டு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வன குற்றங்கள் தொடர்பாகவும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வன ஒதுக்கப் பிரதேசத்தில் மரங்கள் தறிக்கப்பட்ட 139 மரங்களின் கனவளவு டெசி மீற்றர் 263,977 இன் பெறுமதி ரூபா 6.93 மில்லியனாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், ஏனைய 1,304 மரங்களின் கனவளவு மற்றும் நிதி ரீதியான பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. | மரங்களின் கனவளவு மற்றும் நிதி ரீதியான பெறுமதி கணிப்பிடப்பட்டு அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஈ) | புத்தளம் மாவட்டத்தில் பல்வேறு அனுமதிப்பத்திர இலக்கம் H7/911/2016 இன் கீழ் அனுமதிப் பத்திரதாரர் ஒருவர் கருங்கல் உடைக்கும் இயந்திரத்திற்காக அனுமதி பெற்றிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட நில அளவை விஞ்சி 525 பேர்ச் அளவு 2013 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தியிருந்தார். | அனுமதிப் பத்திரதாரர் அனுமதியின்றி பயன்படுத்திய நிலத்தின் அளவிற்காக நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | மேலதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ள நில அளவிற்காக குறித்துரைத்த கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | மீளாய்வாண்டில் அம்பாறை மற்றும் வவுனியா மாவட்டங்களின் வன அலுவலகங்களில் கருங்கல் வேலைத்தளங்களை நடாத்திச் செல்லுகின்ற அனுமதிப் பத்திர தாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகார பிரதேசத்தை விஞ்சி மேலதிகமாக கருங்கல் உடைத்தல் மேற் கொள்ளப்பட்டிருந்தது. திணைக்களத்தால் அந்த கருங்கல் வேலைத்தளங்கள் முறையாக மேற்பார்வை செய்யப்படாதிருந்ததுடன், அதன் மூலம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | அனுமதிப் பத்திரதாரர்கள் மேலதிகமாக உடைத்து அகற்றப்பட்டுள்ள கருங்கல் கியூப் அளவினை தீர்மானித்து கொள்வதற்கு பூகோளவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தின் அறிக்கையின் அடிப்படையில் நிலுவைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | அம்பாறை மாவட்ட வன அலுவலகத்திற்குரியதாக மேலதிகமாக உடைக்கப்பட்ட கருங்கல் அளவிற்காக நிலுவை பணத்தை செலுத்துமாறு அனுமதிப் பத்திரதாரர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் கணக்காய்வு ஐய வினாவிற்கு இது வரையிலும் கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டில் அம்பாறை மாவட்ட வன அலுவலகத்திற்குரிய உப வன அலுவலகங்களில் மர வியாபாரங்கள் பதிவு செய்தல் நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 366,375 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரதாரர்களிடமிருந்து நிலுவைக் கட்டணத்தை அறவிடுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | பதிவு செய்யப்படாமல் அமுல்படுத்தப்படுகின்ற மர வியாபாரங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (எ) | கேகாலை மாவட்டத்தின் தரணாகல மூக்கலான வன ஒதுக்கப் பிரதேசத்தில் கழிவுகளை அகற்றுதல் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டத்தின் மொத்த நில அளவு 1.234 ஹெக்டேயர் ஆகும். (பேர்ச் 488) மதிப்பீட்டு திணைக்களத்தின் பிரகாரம் செயற்திட்ட நிலத்தின் பேர்ச் ஒன்றின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 564 ஆகக் குறைந்த பெறுமதியாக காணப்பட்டது. | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் வருடாந்த வாடகை அறவிடப்பட வேண்டும். | சப்ரகமுவ மாகாண மதிப்பீட்டாளரினால் 2010 நவம்பர் 08 ஆம் திகதிய கடிதம் மூலம் 1.234 ஹெக்டேயர் (பேர்ச் 488) தற்போதைய சந்தைப் பெறுமதி ரூபா 275,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த<br><br>து. |
| (ஏ) | மேலே கூறப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது வன ஒதுக்கப் பிரதேசத்தில் காணப்பட்ட பைனஸ் உள்ளடக்கிய ஏனைய 725 மரங்கள் அளவில் முழுமையாக தறிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது இயற்கைக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் இயலுமான வரை குறைக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஐ) | கோகாலை மாவட்ட வன அலுவலகத்தின் கணக்குப் பிரிவினால் பேணிச் செல்லப்படுகின்ற புதிய சிகாஸ் முறைமையில் வழுக்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | வழுக்கள் இன்றிய முறைமை முறையாக பேணிச் செல்லப்பட வேண்டும். | சிகாஸ் முறைமையில் காணப்படுகின்ற வழுக்கள் தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | கேகாலை மாவட்ட வன அலுவலகத்தின் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகள் மேற்கொள்ளும் போது பதிவு செய்த வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சனநாயக சோஷலிச குடியரிசின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதன் பின்னர் பதிவு செய்த வழங்குனர்களிடமிருந்து அந்த சேவையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஓ) | குருலு உயன தேசிய பூங்காவின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்காக புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்க முடியுமான திட்டமொன்று காணப்படாதிருந்ததுடன், மேற்கூறப்பட்ட பூங்காவில் மலசல கூட முறைமையின் வசதிகளும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நுழைவுச் சீட்டுக்களை விநியோகிப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதுடன் மலசல கூட முறைமையும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஔ) | குருலு உயன தேசிய பூங்கா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற நுழைவுச்சீட்டு விலைகள் குறைக்கப்பட்டமையினால் 2019 திசெம்பர் 16 ஆம் திகதி முதல் 2020 சனவரி 31 வரையான காலப்பகுதியில் திணைக்களத்தினால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 13.07 மில்லியன் ஆகும். | வெளி தொண்டர் அமைப்பு தொடர்பாக முகாமைத்துவத்தினால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (க) | அனுராதபுரம் மாவட்ட வன அலுவலகத்தால் 2006 சனவரி 25 ஆம் திகதி முதல் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அதாவது, 13 வருட காலம் கிரவல் அகழ்வற்காக காணி வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் அண்ணளவாக கிரவல் கியூப் 138,608 அளவொன்று அகழப்பட்டிருந்தது. இந்த | உரிய காணிப் பகுதியில் காடு வளர்த்தல் மற்றும் சுற்றாடல் புனரமைத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| காணியில் 13 வருட காலம் முழுவதும் காடு வளர்த்தல் மற்றும் சுற்றாடல் புனரமைத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் காணப்பட்ட 590 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது. | அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |